<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>HMOP 26/2021</u>**

பெயர் : வித்யா (RW1)

த/பெ. : செல்வமணி

தேதி : 06.04.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

திருமணத்திற்கு பிறகு நானும் எனது கணவரும் சென்னை நங்கநல்லூரில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். எனது கணவர் சென்னையில் I.T. Departmentல் Team Leaderஆக வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். அவர் வேலை பார்க்கும் கம்பெனி வெளிநாட்டு கம்பெனி என்றால் சரிதான். திருமணம் ஆகி எங்களுக்குள் 4 மாத காலம் வரை எந்தவொரு பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான். அவர் வேலை பார்க்கும் கம்பெனி வெளிநாட்டு கம்பெனி என்பதால் பணி செய்வதற்கு குறிப்பிட்ட கால நேரம் என்று கிடையாது. வெளிநாட்டு நேரத்திற்கு வேலை செய்வதால் இரவு நேர வேலை அதிக நாட்கள் வரும் என்றால் சரிதான். அதுபோல் இரவு நேரம் வேலை பார்த்தால் அவர் காலையில் தான் வீடு திரும்புவார் என்றால் சரிதான். அதுபோன்ற சமயங்களில் எனது கணவர் மீது சந்தேகம் கொண்டு வீண்பிரச்சனை செய்துவந்தேன் என்று சொன்னால் சரியல்ல, இரவு நேரத்தில் பணி முடித்துவிட்டு காலை நேரத்தில் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தபோது யார் கூட இரவு தங்கிவிட்டு காலை வீட்டுக்கு வருகிறீர்கள் என்று சந்தேகத்துடன் எனது கணவரை கேட்டு மனஉளைச்சலை ஏற்படுத்தி வந்தேன் என்றால் சரியல்ல.

எனது கணவர் செல்போனில் பேசிக்கொண்டிருந்தபோது அவரிடமிருந்து போனை பறித்து எதிர்முனையில் யாருடன் பேசினீர்கள் என்று கேட்டு அவரை தொந்தரவு செய்தேன் என்றால் சரியல்ல. எனது கணவரை யாரிடமும் வீட்டில் இருந்தபோதும் வெளியில் இருந்தபோதும் பேசக்கூடாது என நான் கட்டுப்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனது கணவர் வெளியில் யார் கூடவோ தொடர்பில் இருந்து வருகிறார்என்று சந்தேகத்தின் பேரில் அவரிடம் பிரச்சனை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு அவரது நண்பர்கள் மத்தியில் பெரிய அவமானம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பிளேடு எடுத்து கையை கிழித்துக்கொண்டு எனது கணவரை மிரட்டிய சம்பவங்கள் நிறைய உண்டு என்றால் சரியல்ல. எனது கணவர் கட்டிய தாலியை கழற்றி வீசி எறிந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் என் மீது மயிலாடுதுறை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 31.05.2020ல் ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல 26.05.2020ல் புகார் கொடுத்தார். அந்த புகாரில் என்ன கூறியுள்ளார் என்றால் நான் அடிக்கடி சந்தேகப்பட்டு பேசுவதாகவும்,. அடிக்கடி தற்கொலை செய்துகொள்வேன் என்று எனது மனைவி என்னை மிரட்டி வருகிறார்

அதனால் எனது மனைவியை அழைத்து விசாரிக்கவேண்டி தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

அந்த புகாரின் அடிப்படையில் என்னை காவல் நிலையத்தில் வைத்து உரிய அறிவுரை வழங்கினார்களா என்றால் என்னை அழைத்து விசாரணை செய்தார்கள். எனது கணவரின் அப்பா அம்மாவை அழைத்து எங்கள் குடும்ப விசயத்தில் தலையிடவேண்டாம் என்றும் அறிவுரை வழங்கினார்கள். காவல் நிலையத்தில் என்னை அழைத்து இனி தற்கொலை செய்துகொள்வேன் என்று எனது கணவரை மிரட்டக்கூடாது என்று கூறினார்கள். வேறு என்ன அறிவுரை வழங்கினார்கள் என்றால் என்னை எனது கணவரிடம் சேர்ந்து வாழவேண்டும் என்றும், எனது கணவர் தற்கொலை இனி செய்து கொள்வதாக மிரட்ட மாட்டேன் என்று உத்தரவாதம் எனது கணவர் கேட்பதாக என்னிடமிருந்து காவல் நிலையத்தில் எழுதி பெற்றுக்கொண்டார்கள். 27.05.2020–ல் எனது கணவரிடமிருந்து வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததா என்றால் வந்தது. அதை பெற்றுக்கொண்டு அதில் கூறியுள்ள சங்கதிகள் தெரிந்துகொண்டீர்களா என்றால் தெரிந்துகொண்டேன். அந்த அறிவிப்பில் என்னிடமிருந்து விவாகரத்து வேண்டும் என்றுக்கூறி அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பில் உள்ள சங்கதிகளை மறுத்து பதிலறிவிப்பு கொடுத்தீர்களா என்றால் இதனை மறுத்து பதில் கொடுக்கவில்லை. அதே நேரத்தில் நான் ஒரு அறிவிப்பு எனது கணவருக்கு அனுப்பினேன். எனது கணவரிடமிருந்து வந்த அறிவிப்பை பார்க்காமலேயே நான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான்.

எனது கணவர் அனுப்பிய அறிவிப்பினை மறுக்காததற்கு என்ன காரணம் என்றால் அந்த நேரத்தில் நான் எனது கணவர் வீட்டில் தான் இருந்தேன். அதனால் என்னால் அனுப்ப இயலவில்லை. எனது கணவர் எனக்கு அனுப்பிய அறிவிப்பில் பெறுவர் முகவரி எனது பெற்றோர் வீட்டு முகவரி என்றால் சரிதான். அதே 27.05.2020 அன்று நான் அனுப்பிய நோட்டீஸில் நான் எனது பெற்றோர் வீட்டு முகவரியான வைத்தீஸ்வரன்கோவிலில் வசிப்பதாகத்தான் கூறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய நோட்டீஸிற்கு உண்டான ஒப்புகை அட்டை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் மாறாக அஞ்சகல துறையின் Online Tracking delivery reportன் கணினி வழி பதிவிறக்கம் செய்ததை இணைத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிக்கையின் படி 02.06.2020ல் அந்த முகவரிக்கு delivery செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அனுப்பிய அறிவிப்பின்போதும், எனது கணவர் அனுப்பிய அறிவிப்பின்போது நான் குடியிருந்தது எனது தந்தை வீட்டில் வசித்து வந்தேன் என்றால் சரிதான்.

எனது கணவர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து ஓராண்டு கழித்து சேர்ந்து வாழ இந்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் கணவருடன் சேர்ந்து வாழவேண்டும் என்று மனுத்தாக்கல் செய்துவிட்டு மயிலாடுதுறை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண் 1ல் எனது கணவர் மீதும், அவரது பெற்றோர்கள் மற்றும் அவரது சகோதரர் மீதும் குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் DVC 36/2021 என்ற எண்ணில் புகார் மனு தாக்கல் செய்தேன் என்றால்

சரிதான். சிங்கப்பூரில் இருக்கும் எனது கணவரின் சகோதரர் மீது DVC 36/2021 ல் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அவர் விடுமுறையின் போது இங்கு வருவார். நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு, விவாகரத்து வழக்கில் தாக்கல் செய்த எதிருரை, எனது கணவரோடு சேர்ந்து வாழ வேண்டும் என்று தாக்கல் செய்த வழக்கு ஆகியவற்றில் எனது கணவரின் சகோதரரின் பேரில் குற்றச்சாட்டு ஏதேனும் கூறியுள்ளேனா என்றால் இல்லை. குடும்ப வன்முறை சட்டத்தில் எனது கணவர் மற்றும் அவரது குடும்பத்தார்கள் என்னை குடும்ப வன்முறை செய்கிறார்கள் என்றும் அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கக் கோரி தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது சீர்வரிசை பொருட்கள் மற்றும் நகைகள் அனைத்தும் திரும்ப வேண்டி அந்த வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

சேர்ந்து வாழ விரும்பம் உள்ள நான் எதற்காக எனது கணவரையும், எனது கணவர் குடும்பத்தாரையும் தண்டிக்கவேண்டும் என்றும், எனது சீர்வரிசை பொருட்களையும் நகைகளையும் திரும்பி தரவேண்டும் என்றும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கணவர் குடும்பத்தை தண்டிப்பதற்காகவோ, எனது பொருட்களை திருப்பி வாங்கவேண்டும் என்பதற்காக அந்த மனுவை தாக்கல் செய்யவில்லை. நான் சேர்ந்து வாழவேண்டித்தான் தாக்கல் செய்தேன். DVC வழக்கிலும் என்னை எனது கணவருடன் சேர்த்து வைக்க கோரிதான் மனுத்தாக்கல் செய்துள்ளேன். எனது கணவரோடு வாழ்ந்த காலகட்டத்தில் எனது கணவரிடம் வரதட்சனை வழக்கு மற்றும் DVC வழக்கு போடுவேன் என்று மிரட்டி வந்தீர்கள் என்றால் இல்லை. எனக்கு திருமணத்தின்போது எனக்கு 40 பவுன் நகை போட்டதாகவும், 2 கிலோ வெள்ளிப்பொருட்கள் வாங்கி கொடுத்ததாகவும், ரூ.2 லட்சம் சீர்வரிசை பொருட்கள் வரதட்சனையாக செய்ததாகவும், கார் வாங்குவதற்கு 3 லட்சமும், Electronic பொருட்கள் வாங்க 2 லட்சமும் திருமணத்தின்போது வரதட்சனையாக செய்தார்கள் என்று எதிருரையில் கூறியுள்ளது பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது எனது பெற்றோர்கள் எனக்கு என்ன நகை செய்தார்கள் என்ற விபரம் எனது கணவருக்கோ அவரது பெற்றோருக்கோ தெரியாது என்றாலும். நகை மற்றும் சீர்வரிசை பொருட்கள் குறித்து மனுதாரரோ அவரது பெற்றோர்களோ கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் திருமணத்தின்போது அணிந்து வந்த நகைகள் அனைத்தும் எனது பாதுகாப்பிலும் எனது பராமரிப்பிலும் தான் இருந்துத என்றாலும் ஒரு போதும் மனுதாரர் வசமோ, மனுதாரரின் குடும்பத்தாரின் வசமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல.

நான் எனது பெற்றோர் வீட்டிற்கு செல்லும்போது நான் எனது பராமரிப்பிலும். பாதுகாப்பிலும் இருந்த நகைகளை நான் எனது பெற்றோர் வீட்டிற்கு செல்லும்போதே நான் எடுத்து சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் வீட்டிலிருந்து எனக்கு திருமண பரிசாக என்ன நகைகள் போட்டார்கள் என்றால் எனக்கு 5 பவுன் தாலி செயினும், சுமார் 3 பவுன் அளவில் மாங்காய் நெக்லஸும் போட்டார்கள். எனது கணவர் வீட்டிலிருந்து மேற்படி போட்ட நகைகள் என் வசம் தான் உள்ளது என்று சொன்னால் இல்லை, தாலிச்செயின் மட்டும் தான்

நான் போட்டுள்ளேன். மேற்கூறிய நகைகள் அனைத்தும் என் வசம் தான் உள்ளது என்றாலும், மனுதாரர் வசம் தான் உள்ளது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. சென்னையிலிருந்து நான் எனது பெற்றோர் வீட்டிற்கு எப்போது வந்தேன் என்றால் எனது பெற்றோர் வீட்டிற்கு வரவில்லை. எனது மாமனார் வீட்டிற்கு தான் சென்றேன். நான் எனது கணவரிடம் வீண் பிரச்சனை செய்து வந்ததால் கடந்த 11.12.2020ல் நான் சென்னையை விட்டு எனது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது நெருங்கிய உறவினர்கள் அரசியல் கட்சியில் யார் உள்ளார்கள் என்றால் இருக்கிறார்கள் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது பெற்றோருக்குதான் தெரியும். அரசியலில் உள்ள உறவினரை வைத்து மனுதாரரையும் அவரது குடும்பத்தாரையும் மிரட்டினேன் என்றால் சரியல்ல.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.